**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 502 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | திருமதி. சோபனாகுமாரி |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **26.06.2024**

எதிரிகள்1,6 ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் மதுரை சிங்காரபுரத்தில் குடியிருந்து வருகிறேன். அசா1 ஐத் தெரியும். ஆஜர் 1,6 எதிரிகளைத் தெரியும். மற்ற எதிரிகளான 2 முதல் 5 எதிரிகளையும் தெரியும். 2 முதல் 5 எதிரிகள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவர்களுககு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது நான் மதுரை குழந்தைகள் பாதுகாப்பு அலகில் ஆற்றுப்படுத்துனராக பணிபுரிந்து வருகிறேன். சமூக பாதுகாப்புதுறை இணைஇயக்குநர் அவர்கள் திரு.ஸ்ரீனிவாசன், ரவிசங்கர் ஆகியோர் கொடுத்த தகவலின் பேரில், மேற்படி நபர்களை வரச் சொல்லி விசாரணை செய்தோம். அப்போது, Golden trust நடத்தும் சித்ராபாய் மற்றும் அவரது தம்பி பிரபாகர் மற்றும் அவரது மனைவி பிரபாவதி ஆகியோர் SS மருத்துவமனையில் பிறந்து 10 நாட்கள் ஆன ஆண்

குழந்தையை விற்பதற்காக முயல்வதாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன தகவலின் பேரில், ஸ்ரீனிவாசன் அவர்களுடன் எங்கள் அலுவலக data analysist திரு,ஸ்டாலின் அவர்களுடன் கூடல்புதூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். மேற்படி திரு.ஸ்ரீனிவாசன், ரவிசங்கர் ஆகியோர் சொன்னதன் படி, அந்த குழந்தையை விற்பனை செய்வதற்காக குழந்தையை மறைத்து வைத்திருப்பதாகவும், கவிதா என்பவரிடம் அந்த குழந்தை உள்ளதாகவும், கவிதா என்பவரின் போன் நம்பர் கொடுத்தார்கள். கவிதாவிடம் போன் செய்து கேட்டபோது, அவரிடம் தான் குழந்தை இருப்பதாகச் சொன்னார். அதன்பின் நாங்கள் அனைவரும் கவிதா சொன்ன தகவலின் பேரில், மறவன்குளத்தில், பாக்கியலெட்சுமி என்பவர் வீட்டில் கவிதா அந்த குழந்தையுடன் இருந்தார். நாங்கள் அவரைக் கூட்டிக் கொண்டு வந்தோம். குழந்தைக்கு மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், குழந்தைகள் நலக்குழுவில் அந்த குழந்தையை ஆஜர் செய்துவிட்டோம். அதன்பின், KK நகரில் உள்ள golden trust க்குச் சென்று, அங்கு சித்ராபாய், பிரபாகரன் ஆகியோர் எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்தார்கள். 20.06.2016 ம் தேதி எங்கள் துணைஇயக்குநருக்குத் தகவல் வந்தது. 21.06.2016 ம் தேதி புகார் அளித்துவிட்டு விசாரித்தோம். திரு.ஸ்ரீனிவாசன், ரவிசங்கர், கவிதா ஆகியோரிடம் நான் விசாரணை செய்த போது, SS மருத்துவமனையில் அந்த குழந்தை பிறந்ததாகவும், குழந்தையின் தாய் குழந்தையை வேண்டாம் என்று சொன்னதாகவும், அதனால் ராஜசேகரன் என்பவர் பிரபாகரனிடம் சொல்லி மூலம் குழந்தையை விற்பனை செய்ய பிரபாகரனின் அக்கா சித்ராபாயிடம் சொன்னதாகவும் சொன்னார்கள். நாங்கள் அவர்களை விசாரணை செய்தபோது போலிசாரும் உடன் இருந்தார்கள். போலிசார் என் முன்பும், எங்கள் அலுவலக data analysist திரு.ஸ்டாலின் என்பவர் மூலம் 4 வது எதிரி கவிதாவை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தபோது, அவர் அளித்த வாக்குமூலத்தை போலிசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள். 4 வது எதிரியின் ஒப்புதல்

வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். **4 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.4 ஆகும்.** சித்ராபாய், பிரபாகரன் ஆகியோரையும் காவல் நிலையத்தில் எங்கள் முன்னிலையில் தான் போலிசார் விசாரணை செய்தார்கள். 2 வது எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பமும் என்னுடையது தான். **2 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அதசாஆ.5 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை